Downloaded From: http://www.dhyeyaias.com

CS (MAIN) Exam : 2017

**STH–C–TML**

# தமிழ்

( கட்டாயத்தாள் )

| காலஅளவு: மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள்: 300 |
|---|---|

**வினாத்தாளுக்கான விதிமுறைகள்**

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் தமிழில் (தமிழ் எழுத்தில்) மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கேக் கோடு கிழிக்கவும்.

# TAMIL

**( Compulsory )**

| Time Allowed : Three Hours | Maximum Marks : 300 |
|---|---|

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions**

All the questions are to be attempted.

The number of marks carried by a question/part is indicated against it.

Answer must be written in TAMIL (Tamil script) unless otherwise directed in the question.

Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.

Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.



Downloaded From: http://www.dhyeyaias.com

Downloaded From: http://www.dhyeyaias.com

**1.** பின் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து (600) சொற்களில் கட்டுரை எழுதுக : 100

(a) அளவுக்கு அதிகமாகத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துக்கள்

(b) மக்களாட்சியின் வலிமையே மதச் சார்பின்மை

(c) பண மதிப்பு நீக்கத்தால் இந்தியப் பொருளாதாரத்திற்கு உண்டாகும் நீண்ட காலப் பயன்கள்

(d) ஆயுர்வேத மருத்துவமுறையின் மீதான மேற்கத்திய நாடுகளின் ஈர்ப்பு

**2.** பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக : 12×5=60

நூல்கள் உள்ளத்திற்குத் தலைசிறந்த உணவு ஆகும். மனிதர்கள் எவற்றையெல்லாம் சிந்தித்தார்களோ, செய்தார்களோ, கண்டறிந்தார்களோ அவை எல்லாம் நூல்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன என ஒரு சிந்தனையாளர் கூறியுள்ளார். மனித நாகரிக, பண்பாட்டு வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்குமான பெருமை நூல்களையே சாரும். நூல்களின் முதன்மையும் மதிப்பும் ஈடு இணையற்றவை. உள்ளத்தின் உள்ளே ஒளியூட்டுவன நூல்கள், நல்ல நூல்கள் மனிதர்களை விலங்குத் தன்மையிலிருந்து கடவுள் தன்மைக்கு இட்டுச் செல்கின்றன; அவர்களது அறவுணர்வைத் தட்டியெழுப்புகின்றன, மனிதர்களுக்கும், சமூகத்திற்கும், நாட்டுக்கும் நல்வழி காட்டுகின்றன. அவை நமக்கு அகத்தெழுச்சியை உண்டாக்கி நம் உள்ளங்களில் நிலையான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

மனிதர்களுக்குப் பொழுது போக்குச் சாதனங்களாகவும் நூல்கள் அமைகின்றன. இங்கே, பொழுதுபோக்கு என்பது வெற்று மகிழ்ச்சியை விளைவிப்பது என்னும் பொருளில் மட்டும் வழங்கப்படவில்லை; இன்னும் ஆழமான பொருளில் அது ஆளப்பட்டுள்ளது. வாசகர்களின் உள்ளத்தை ஆழமாகத் தொட்டு அவர்களது இதயங்களை ஈர்த்துக் கொள்ளும் நூல்களே பொழுதுபோக்கு நூல்கள் எனப் பொருள்படுவதற்கு உரியவை ஆகும். எந்த நூல்கள் வாசகர் தம் உள்ளத்தில் அழுத்தமாக இடம் பிடிக்கின்றனவோ, அவையே இன்பகரமான நூல்கள் ஆகும். இவ்வகையில் பொருட்கனதியல்லாத நூல்கள் குறைத்து மதிப்பிடற்கு உரியவை அல்ல. அத்தகைய நூல்கள் மனிதர்களின் மன அழுத்தத்தைப் பேரளவு குறைக்கின்றன. மேலும் அவை விரக்தியுற்ற அவர்களது உணர்வை உயர்த்துகின்றன.

நல்ல நூல்கள் மனிதர்களுக்கு அறிவும் இன்பமும் ஒருங்கே தருகின்றன. அறிவியல், வணிகவியல், கலையியல், சட்டவியல் குறித்த நூல்கள் மனிதர்களுக்கு அறிவூட்டுபவை ஆகும். அவற்றைப் படிப்பதால் மனிதர்கள் தமது உள்வலிமையை உணர்கின்றனர். நமக்கு உண்மையான வழிகாட்டிகளாக நூல்கள் விளங்குகின்றன என்பது உண்மையே. அவை அறிவூட்டுவதோடு, புதிய துறைகள் பற்றிய அறிவு பெறவும், மர்மங்களுக்குள் நுழைந்து ஆய்ந்து அவற்றுள் தோயவும், நம்மைச் சிந்திக்க வைக்கவும் கருத்துரைக்கவும் செய்கின்றன. குழப்பமான மன நிலையிலிருந்து தெளிவு பெறவும், மன உறுதி பெறவும் நூல்கள் உதவுகின்றன. கீதையைக் காந்தி தன் தாய் எனக் கூறினார். ஏனெனில் ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் அது அவருக்கு வழிகாட்டியது. நம்மைத் தண்டிக்காத, நம்மிடம் கோபித்துக் கொள்ளாத, நம்மிடமிருந்து கைம்மாறு வேண்டாத வழிகாட்டிகளாக நூல்கள் விளங்குகிற அதே வேளையில் அழிவின்மையின் சாரத்தையும் அவை நமக்குத் தரத் தவறுவதில்லை.



Downloaded From: http://www.dhyeyaias.com

Downloaded From: http://www.dhyeyaias.com

மனிதர்களுக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் நூல்கள் வழங்குகின்றன. புத்தகத்தை நேசிப்பவர் ஆசீர்வதிக்கப் பட்டவர் ஆவார். அவர்களுக்கு எப்போதும் வெறுமை உணர்வு ஏற்படுவதில்லை. நூல்களை முழுமையாக நம்பலாம்.

கருத்துப் போரில் நூல்களே ஆயுதங்கள். ஒரு நூலில் அடங்கியுள்ள கருத்துக்கள் சமுதாயம் முழுவதையும் மாற்றவல்லவை. இன்றைய உலகம் கருத்துக்களின் உலகம். சமூகத்தின் எல்லா மாற்றங்களும் புரட்சிகளும் ஏதேனும் ஒரு கருத்திலிருந்து - கொள்கையிலிருந்து தோற்றம் பெற்றவை ஆகும். தலை சிறந்த நூல் என்பது ஒரு தனி மனிதனின் உணர்வை, மனச் சான்றை எழுப்பி, ஒட்டு மொத்த சமூக எழுச்சியில் முக்கியப் பங்காற்ற வைப்பது ஆகும். நூல் வாசிப்பின் மூலம் ஒரு மனிதனின் பார்வை விரிவு பெறுகிறது. உயர்ந்த எண்ணங்கள் உள்ளத்தில் உருவாகின்றன.

முந்தைய தலைமுறையின் அனுபவங்களை அடுத்த தலைமுறைக்குச் செம்மையான முறையில் அளிக்கும் நூல்கள் நிலையான செல்வங்கள் ஆகும். நூல்களில் இடம்பெற்றுள்ள அறிவை எவராலும் அழிக்கமுடியாது. சுருங்கக்கூறின், நூல்கள் பெரும் பெறுமதி உடையவை ஆகும்.

*(a)* நூல்கள் பெரும் பெறுமதி உடையனவாக இருப்பது ஏன்?

*(b)* பொழுதுபோக்கு என்பதன் பொருள் ஆழமானது என்பதில் ஆசிரியர் கூற விழைவது என்ன?

*(c)* உண்மையான வழிகாட்டிகளாக நூல்கள் விளங்குவது ஏன்?

*(d)* தன் தாயாகக் கீதையைக் காந்தி குறிப்பிட்டது ஏன்?

*(e)* சமூகத்தில் புதிய விழிப்புணர்வை நூல்கள் எப்படி ஏற்படுத்துகின்றன?

**3.** பின்வரும் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக : 60

உலகத்தில் வெற்றிபெற மிக முக்கியமான வழிகளுள் ஒன்றாகக் கடின உழைப்பு அமைகிறது. கடின உழைப்பின் வாயிலாக நமது ஆசைகளை நிறைவேற்ற இயலும். உலகம் என்பது தொழிலின் (வினையின்/கர்மாவின்) பரப்பாக விளங்குவதால் தொழிற்படுவது - வினையாற்றுவது நம் கடமையாகும். எப்போது நாம் கடுமையாக உழைக்கிறோமோ அப்போதுதான் நாம் வெற்றி எய்த முடியும்.

வாழ்க்கைக்கு இயக்கம் அளிப்பதே கடும் உழைப்புத்தான். நாம் உழைக்கத் தயங்கினால் வாழ்க்கையின் இயக்கம் நின்றுவிடும். சோம்பல் நம்மை ஒரு வட்டத்துக்குள் முடக்கி விடுவதோடு அதிலிருந்து விடுபட்டு வெளியே வருவதே மிகவும் சிக்கலானதாக ஆக்கிவிடுகிறது. கடினமாக உழைக்கும் ஒருவர் முன்னேறுகிறார், எல்லா இடர்களையும் எளிதில் வென்றுவிடுகிறார்; பன்முக வெற்றியை எய்துகிறார்.

கடுமையாக உழைக்கும் ஒருவர் விதியின் மேல் பழிபோட மாட்டார்; உடல் வருந்திடினும், முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறார். கடினமாக உழைத்தும் வெற்றிகிட்டா விட்டால் அதற்காக அவர் மனம் தளர்வதில்லை. தனது தோல்விக்கான காரணத்தை அவர் கண்டறிய முனைகிறார். அதாவது, இடையூறுகளைக் கடந்து முன்னேறி வெற்றி காண அவர் உழைக்கிறார்.



Downloaded From: http://www.dhyeyaias.com

Downloaded From: http://www.dhyeyaias.com

ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் இந்த உலகத்தில் நாம் போராட வேண்டியுள்ளது. நமது பாதையை நாமே அமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நாம் எவ்வளவு வலிமையும் வளமையும் உடையவர்களாக இருப்பினும் கடினமாக உழைக்காவிடில் வெற்றிக்கான பாதையில் நாம் கால் பதிக்க முடியாது. எல்லாப் பெருமக்களின் வெற்றிகளது வேர்களிலும் உழைப்பு, வலிமை ஆகியவற்றின் ஆற்றல்களே அமைந்திருக்கின்றன.

நமது சமூகத்தில் மிகப் பலரும் விதியை நம்புகிறவர்களாகவோ 'நம் கையில் ஒன்றுமில்லை; எல்லாம் இயற்கையின் நியதிப்படி நடக்கின்றன' என நம்புகிறவர்களாகவோ உள்ளனர். அப்படிப்பட்ட நம்பிக்கை உடைய எவரும் இந்த உலகத்தில் எதையும் சாதித்ததில்லை. எல்லாப் பெரிய கண்டுபிடிப்புக்களும், புத்தகங்களும், படைப்புக்களும் கடின உழைப்பு வாயிலாகவே சாத்தியமாகியுள்ளன. நமது வளமைகளும், திறமைகளும் நமது பாதையைக் கண்டறிய உதவும் செயலாக்கிகளாக மட்டுமே விளங்குகின்றன. கடின உழைப்பின் மூலமே நாம் நமது இலக்கினை எட்ட முடியும்.

புகழும் செல்வமும் கடின உழைப்பினால் மட்டுமே எய்தக் கூடியவை. நமது கடமைகளை ஆற்றக் கடினமாக நாம் உழைக்கும் போதே ஆழமாய் வேர் ஊன்றிய இன்பத்தில் திளைக்க முடியும். நம் அகமனம் நமது எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டுத் தூய்மை அடைய முடியும்; நமக்கு முழுமையாக மன நிறைவு உண்டாக முடியும். கடினமாக உழைக்கும் ஒருவனுக்கு எந்தச் சடங்கும் தேவை இல்லை. கடமை என்னும் பாதையில் முன்னேறிச் செல்வதே அவனது முதன்மையான குறிக்கோள். நாள் முழுவதும் கடுமையாக உழைத்த உழவர் ஒருவர் மாலை வேளையில் தனது குடிசையிலிருந்து பாடும் நாட்டுப்புறப்பாடல் தெய்வீக இசையைப் படைக்கிறது.

உடல் உழைப்பு உள்ளத்திற்கு நிறைவு தருவதோடு உடலுக்கு ஆரோக்கியத்தையும் தருகிறது. இன்றைய மனிதர்கள் உடல் உழைப்பு இல்லாததால் பிணிகளால் சூழப்பட்டுள்ளனர். ஒவ்வொருவருக்கும் உடல் உழைப்பு இன்றியமையாதது. உடல் உழைப்பை மேற்கொள்கிறவர்கள் நீண்ட நாள் வாழ்கிறார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான மனம் இருக்கும் என்று கூறுவர். ஆரோக்கியமான ஒருவர் மிகவும் வேதனையான உண்மைகளைக் கூட எளிதாக எடுத்துக் கொள்வார். துன்பமான சூழல்களில் கூட அவர் நடுக்கம் கொள்வதில்லை. அவற்றை வீரத்தோடு எதிர்கொள்ளவே முயல்வார். எல்லாச் சிக்கல்களுக்கும் அவர் தீர்வு காண்பார்.

உள்ளம் சார்ந்த உழைப்பின் பொருளைப் புரிந்து கொண்டு நம் முனிவர்கள் தியானத்தில் ஈடுபடுவர்; மக்கள் பொதுநலத்தைப் பிரதிபலிப்பர்.

கடின உழைப்பு என்பதற்குத் தனியே வேறு ஒரு பொருளும் உண்டு. இந்தப் பொருள்படி உழைப்பு என்பது உற்பத்தி சார்ந்ததாகவோ, சாராததாகவோ இருப்பது ஆகும். உழவர் தனது நிலத்தில் கடுமையாக உழைக்கிறார். இந்த உழைப்பு உற்பத்தி சார்ந்தது. விளையாட்டில், அல்லது உடற்பயிற்சியில் பயன்படும் உழைப்பு உற்பத்தி சாராதது ஆகும். ஆனாலும் இந்த உழைப்பும் அதற்குரிய இன்றியமையாமை உடையதே. காந்தி, உழைக்க வேண்டும், ஆனால் உற்பத்தி சார்ந்த உழைப்பாக அது இருக்கட்டுமே என்று ஒருமுறை குறிப்பிட்டார். இவ்வாறு எல்லா வகை உழைப்பின் இன்பத்தையும் காந்தி துய்த்தவர் ஆவார். எந்த நாடுகளின் மக்கள் கடுமையாக உழைக்கிறார்களோ அந்த நாடுகளே முன்னேற்றம் கண்டுவருகின்றன. உலகப் பெரும் போரின்



Downloaded From: http://www.dhyeyaias.com

Downloaded From: http://www.dhyeyaias.com

கொடுமைகளை எல்லாம் எதிர்கொண்ட ஜப்பானும் ஜெர்மனியும் கடின உழைப்பின் வாயிலாகத் தமது நாடுகளைப் புனரமைத்துள்ளன.

நிறைவாக, இப்படிச் சொல்லலாம்: வாழ்க்கை இன்பமாகவும், படைப்பின் அடிப்படையாகவும் அமைவதற்குக் கடின உழைப்பே உதவும்.

(*433* words)

**4.** பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க : 20

1919 இல் அலகாபாத் நகராட்சித் தலைவராகப் புகழ்பெற்ற விடுதலைப் போராட்ட வீரரான இராஜஸ்ரீ புருஷோத்தம் தாஸ் தாண்டன் பொறுப் பேற்றுக் கொண்டார். அவருக்கு இடரான சூழல் ஒன்று இருந்தது. அவர் தலைவராக இருந்த போதிலும், ஆங்கிலேயர்களின் அதிகார செல்வாக்கும் மிக்கிருந்ததால் அவர்களுக்கு இடையே ஒரு சாதாரண இந்தியரான அவருக்குப் பணியாற்றுவது சிரமமாக இருந்தது. அவர் பதவிக்கு வந்ததும் இராணுவப் படையினர் விடுதியில் இருந்தவர்கள் தண்ணீரைப் பயன்படுத்தினாலும் அதற்கான வரிகட்ட வில்லை என்பதைக் கண்டறிந்தார். இராணுவப் படை விடுதிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஆங்கிலேயர்கள் வரி செலுத்தாவிட்டால் தண்ணீர் வழங்குவது நிறுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இது அந்த விடுதியல் மட்டுமன்றி நகரத்திலும் நகராட்சியிலும் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது. உள்ளூர் செய்தித்தாள்கள் தாண்டன் அவர்களின் ஆணைக்கு முதன்மை தந்து வெளியிட்டன. தண்ணீர் வழங்குவதை நிறுத்த வேண்டிய அந்தக் கடைசி நாளில் விடுதி அலுவலர்கள் பலரும் நகராட்சி அலுவலகத்திற்கு வந்தனர். அவர்களுள் மூத்த அதிகாரி ஒருவர் விடுதிக்குத் தண்ணீர் வழங்குவதை நிறுத்த முடியாது என்றார். உடனே தாண்டன் அவர்கள் அமைதியான குரலில் வரி செலுத்தப்படாவிட்டால் தண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

அந்த அதிகாரி கோபத்தில் உரத்துக் கத்தினார். ஆனாலும் தாண்டன் அவர்கள் உறுதியாக இருந்தார். உடனே அந்த அதிகாரி அங்கிருந்து போய்விட்டார். எங்கும் ஒரே பரபரப்பு. ஒவ்வொருவரும் தாண்டன் அவர்களது சாந்தத்தையும் உறுதியையும் கண்டு வியந்தனர்.

மறுநாள் விடுதியைச் சார்ந்த இராணுவ அலுவலர்கள் வரியைச் செலுத்தினர்.

**5.** பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க : 20

In ancient times in most civilized countries, for example in Egypt, Iraq, India, China and in the Roman Empire, many great irrigation works were constructed. In very hot countries, water is even carried in underground channels to prevent it from being evaporated by the sun's heat. In modern times, great dams have been built across rivers and these are used for more than one purpose, hence they are called multipurpose undertakings. Firstly, such dams help to prevent floods, by controlling the amount of water which rushes down a river in the rainy season. This also prevents an enormous amount of damage and loss to farmers. Secondly, by storing up great quantities of water in the artificial lakes behind the dams, irrigation can be provided for many acres of land in the dry season, so that crops can be



Downloaded From: http://www.dhyeyaias.com

Downloaded From: http://www.dhyeyaias.com

grown where none would have grown before. Thirdly, the people in the towns and cities in the neighbourhood can be certain of getting a sufficient supply of water for drinking and other purposes, even in the driest weather. Fourthly, the water stored up behind the dams is made to generate electric power by letting it run through turbines.

**6.** (a) பின்வரும் ஒவ்வொன்றின் இரு வேறு பொருள் புலப்படுமாறு சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக : 2×5=10

(i) மதி

(ii) திங்கள்

(iii) அணி

(iv) நூல்

(v) மாலை

(b) பின்வரும் இணைகளின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு ஏற்ற சொற்றொடர்களில் அமைத்து எழுதுக : 2×5=10

(i) பலி - பழி

(ii) புலி - புளி

(iii) குரல் - குறள்

(iv) பலம் - பழம்

(v) மனம் - மணம்

(c) பிரித்தெழுதுக : 1×5=5

(i) புளியம்பழம்

(ii) நாண்மலர்

(iii) பூஞ்சோலை

(iv) வெந்நீர்

(v) சேவடி

(d) எதிர்ச்சொற்கள் தருக : 1×5=5

(i) பன்மை

(ii) நன்று

(iii) வறுமை

(iv) செலவு

(v) புகழ்



Downloaded From: http://www.dhyeyaias.com

Downloaded From: http://www.dhyeyaias.com

*(e)* எதிர்மறை வாக்கியமாக மாற்றுக : 1×5=5

*(i)* நாளை மழை பெய்யக்கூடும்

*(ii)* எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பான்

*(iii)* அடிக்கடி தேநீர் அருந்துவாள்

*(iv)* எப்போதாவது புயல் வீசும்

*(v)* இன்று போய் நாளை வா

*(f)* பிழை நீக்கி எழுதுக : 1×5=5

*(i)* அவன் புளால் உண்பான்

*(ii)* அவள் கோளம் போட்டாள்

*(iii)* அவருக்கு மாழைக்கண்

*(iv)* ஆறில் தண்ணீர் இல்லை

*(v)* சுவற்றில் எழுதாதே

★ ★ ★



Downloaded From: http://www.dhyeyaias.com